**செய்தி வெளியீடு எண் : 413** **நாள்: 16.03.2022**

**செய்தி வெளியீடு**

**மன்னார் வளைகுடாவில் உள்ள மெல்லுடலிகள் குறித்த விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டி புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (16.03.2022) தலைமைச் செயலகத்தில், The Molluscs of Gulf of Mannar, India and Adjacent Waters: A Fully Illustrated Guide (மன்னார் வளைகுடாவில் உள்ள மெல்லுடலிகள் குறித்த விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டி) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் இந்தியாவில் முதன்முறையாக ஆவணப்படுத்தப்பட்ட கடல் மெல்லுடலி இனங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான இனங்களை விளக்குகிறது.

மன்னார் வளைகுடாவின் மெல்லுடலிகளைக் குறித்து கடந்த 200 வருடங்களாக ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்த போதிலும், அவைகளின் இனங்களைக் குறித்த பட்டியல்களும் மற்றும் சிறிதளவு தகவல்கள் உள்ள கட்டுரைகளுமே உள்ளன. **"இந்தியாவின் மன்னார் வளைகுடா மற்றும் அருகில் உள்ள கடற்பகுதிகளில் உள்ள மெல்லுடலிகள் விளக்கப் படங்களுடன் கூடிய வழிகாட்டி"** என்ற புத்தகமானது, மன்னார் வளைகுடாவில் இவ்வினங்கள் குறித்த விரிவான தகவல்களை கொண்டதாகும். விளக்கப் படங்களுடன் மெல்லுடலிகளின் அதிகாரப்பூர்வமான வகைப்பாடு மற்றும் இனம் கண்டறிதல் குறித்த இப்புத்தகம் 722 சங்கு இனங்கள், 287 சிப்பி இனங்கள், 21 கனவாய் இனங்கள் மற்றும் 4 பாலிபிளக்கோபோரன்ஸ் இனங்கள் உள்ளிட்ட மொத்தம் 1,041 மெல்லுடலி இனங்களை தெளிவான படங்களுடன் காட்சிப்படுத்துகிறது.

இந்த வழிகாட்டி புத்தகம், இந்தியாவின் சிறந்த இரு ஆராய்ச்சி நிறுவனங்களாகிய, சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி மையம் மற்றும் கேரள பல்கலைக் கழகத்தின் நீர் வாழ்வியல் மற்றும் மீன்வளத்துறை இணைந்து கடந்த

இருபது வருடங்களுக்கு மேலாக மேற்கொண்ட ஆராய்ச்சிக் கணக்கெடுப்புகளின் தொகுப்பாகும். பல வர்ணங்களுடன் கூடிய இந்த புத்தகம் மன்னார் வளைகுடா உயிர்க்கோள மேலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், மீன்வள மேலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சங்கு சேகரிக்கும் பொழுதுபோக்காளர்கள், என அனைவருக்கும் மெல்லுடலிகளைக் குறித்த குறிப்பறியும் புத்தகமாக அமையும். அதுமட்டுமின்றி, சர்வதேச அளவில் மெல்லுடலிகளைக் குறித்த ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கும் படங்களுடன் கூடிய இப்புத்தகம் பேருதவியாக இருக்கும்.

இந்த புத்தகத்தின் நூலாசிரியர்கள் சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் ஜே.கே. பேட்டர்ஸன் எட்வர்ட், கேரள பல்கலைக் கழகத்தின் நீர் வாழ்வியல் மற்றும் மீன்வளத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பிஜுகுமார், குஜராத் பாலைவன சூழல் நிறுவனம் – கடற்கரை மற்றும் கடல் சூழலியல் பிரிவு திட்ட ஆராய்ச்சியாளர் முனைவர் ரா.ரவினேஷ் ஆகியோர் ஆவர். உலக அளவில் மெல்லுடலி ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் முனைவர் கிரகாம் ஆலிவர், இங்கிலாந்து – வேல்ஸ் தேசிய அருங்காட்சியகம் மற்றும் முனைவர் ஹெங்க் டெக்கர், நேச்சுரலிஸ் உயிர்ப்பல்வகைமை மையம், நெதர்லாந்து ஆகியோர் இப்புத்தகத்தின் பதிப்பாசிரியர்களாவர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., இப்புத்தகத்தின் ஆசிரியர்கள் முனைவர் ஜே.கே. பேட்டர்ஸன் எட்வர்ட், முனைவர் ரா.ரவினேஷ் மற்றும் முனைவர் பிஜுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**